
லயன்
காமிக்ஸ்
பலி கேட்ட புதையல்!
ரூ-3·50

# வாசகர் கடிதம்

**E. R. B. சற்குணர், சென்னை - 75.**

பத்தாவது ஆண்டிற்கு அடியெடுத்து வைக்கும் நமது லயனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். 1994ல் 100வது இதழ் படு பிரமாதமாக அமைய வேண்டும். அனைத்துப் பழைய ஹீரோக்களையும், காமெடியன்களையும் மட்டும் பிர சுரியுங்கள்.

**L. சிவக்குமார், திருப்பூர்.**

லாரன்ஸ் டேவிட், டேஞ்சர் டயபாலிக், டெக்ஸ் வில்லர், ஸ்பைடர், அதிரடிப்படை ஆகியோரை லயன் 100வது இதழில் ஒன்றாக வலம் வரச் செய்யுங்கள்!

**கிருபாகர் ஆப்ரஹாம், சென்னை - 24.**

லயன் 100வது மலரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். டெக்ஸ் வில்லர், ஸ்பைடர், ஆர்ச்சி, இரும்புக் கை நார்மன், ராடார், பெருச்சாளிப் பட்டாளம் போன்ற அதிரடி ஹீரோக்களின் கதைகளை அதில் வெளியிடுங்கள்!

**S. சரவணன், ஆத்தூர் - 636 102.**

ராக்கெட் ரகசியம் கதை ராக்கெட் வேகத்தில் இருந்தது!

**ஜெ. நிமல்ராஜ், கொழும்பு - 13.**

நானொரு லயன் ரசிகன். (இல்லாவிட்டால் எதற்காக 15 - 25 சதம் செலவு செய்து கடிதம் எழுதுகிறேன்) நூறாவது லயன் வருகிறது என அறிந்தேன். மகிழ்ச்சி. டெக்ஸ் வில்லர், ஆர்ச்சி, ஸ்பைடர், ரிப் கிர்பி, காரிகன் ஆகியோரின் சாகஸம் நிச்சயம் நூறாவது இதழில் வர வேண்டும். அதற்காக ரூ. 25/- விலையில் வெளியிடுகிறேன் பேர்வழின்னுட்டு என் வயிற்றில் புளியைக் கரைக்காதீங்க... ரூ. 3.50 புத்தகமே இங்கே ரூ. 10/- விலையில் விற்கிறது. ரூ. 25/- ன்னா... வேண்டாம் சாமி!



# ஹாட்-லைன்!

லயன் ரசிகர்களே,

வணக்கம். நீங்கள் படிக்கவிருக்கும் ''பலி கேட்ட புதையல்'' வழக்க மான ரிப் கெர்பி கதைகளைப் போல் இல்லாமல் மிக மிக வித்தியாசமான தாக இருக்கும்! யுகங்களாய் மனிதனை ஆட்டிப் படைத்து வரும் மர்ம உலோகத்தை ரசாயன முறையில் செய்ய நினைக்கும் ஒரு வெறியனின் கதை இது! கதையைப் படித்து முடித்தவுடன் அதன் Climax பற்றிய உங்கள் எண்ணங்களை எழுதியனுப்புங்களேன்!

இந்த மாதம் முதல் புதியதொரு போட்டி நமது லயனில் ஆரம்பமாகப் போகிறது! இனி ஒவ்வொரு இதழின் பின்னட்டையிலும் ''இன்ஸ்பெக்டர் டேஞ்சர்'' எனும் அசகாய சூரரின் ''க்ரைம் க்விஸ்'' இடம் பெறும். விடு விக்க முடியாத பல மர்மங்களை இன்ஸ்பெக்டர் டேஞ்சர் நொடியில் தீர்த்து விடுவார். அவரோடு சேர்ந்து நீங்களும் துப்பறிந்து மர்மத்தை எப்படி விடுவிக்கிறார் என்பதை எழுதியனுப்ப வேண்டும். சரியான விடையும், விடையைக் கண்டுபிடித்த வாசகர்களின் பட்டியலும் அடுத்த இதழில் வெளியாகும். சரியான விடையை எழுதும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வித்தியாசமான பரிசு உண்டு!

அடுத்த மாதம் ஏஜெண்ட் காரிகன் தோன்றும் ''எதிரிக்கு எதிரி'' எனும் க்ரைம் த்ரில்லர் வருகிறது. காரிகனின் பரம எதிரியான டாக்டர் செவன் இதில் மறுபிரவேசம் செய்கிறார்!

லயனின் 100வது இதழ் பற்றி அடுத்த இதழில் அறிவிப்பு வருகிறது! மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புடன்,





## இன்ஸ்பெக்டர் டேஞ்சரின்
## க்ரைம் க்விஸ் - 1

பின்னட்டையில் உள்ள மர்மத்திற்கான விடையைக் கண்டு பிடித்து ஒரு போஸ்ட்-கார்டில் உங்கள் தெளிவான முகவரியோடு எழுதி அனுப்புங்கள்! விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி - 31.10.93.





சில பேருக்கு ஒரு ராசி உண்டு! தொல்லையைக் கண்டு ஒதுங்க நினைத்தால் கூட, அதுவாகவே விரட்டி வந்து சேர்வ துண்டு! பாருங் களேன்... ஒரு நாள் டெஸ்மாண்ட் பார்க் கில் சவகாசமாய் நடந்து கொண் டிருந்த போது...
ஓடிக் கொண்டிருந்த தொரு குதிரையின் லாடம் கழன்று பாய்ந்து வந்தது..!
இரு கனமான பொருட்கள் சந்திக் கும் போது -
மடேர்!
பலத்த சப்தம் ஏற்படு வது சகஜம் தானே?
என்னடா இது!
ஓ கோ... லாடம்! கொடுக்கும் தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள்... இங்கு தொப்பியைத் தட்டி விட்டுக் கொடுத் துள்ளதே! ம்ம்... வந்த வரை வரவு!



ஐயம் சாரி! உங்களுக்கு காயம் எதுவும் இல்லையே?
காயமா? மேடம் - உங்கள் கையால் சாக நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!
சாகவா...? நீங்கள் அப்படி எல்லாம் சொல்லக் கூடாது! குதிரையின் கா-கால் லாடம் கழன்று...
மை டியர் லேடி, உங்கள் இருவர் மீதும் குற்றமில்லை!
எனினும் நமது விநோத சந்திப்பின் நினைவாக இதை வைத்துக் கொள்ள விரும்புகிறேன்...
பரவாயில்லை... லாடம் வந்த நேரம் ராசியாகத் தானிருக்கிறது!
வைத்துக் கொள்ளுங்கள்! இதோ - என் அட்ரஸும், டெலிபோன் நம்பரும்! தேவைப்பட்டால் உடனே தொடர்பு கொள்ளுங்கள்!


குதிரை லாடத்தில் ராசியா?
தேய்ந்த குதிரை லாடம் அதிர்ஷ்ட மான தொரு பொருள் மேடம்! என்னுடைய வீட்டுக் கதவின் மேல் இதை அடித்து வைக்கப் போகிறேன்!
அதிர்ஷ்ட தேவதையே... அடியேனை கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக் கொள்!
நீங்கள் தப்பாக நினைக்க மாட்டீர் கள் என நினைக் கிறேன், சார்! கதவு நிலை பாழாகி விடுமா?
நோ. டெஸ்மாண்ட்! ஆனால் நீ தப்பு பண்ணுகிறாய்!
தப்பா..?
ஆமாம் டெஸ்மாண்ட்!



லாடத்தின் இரு முனைகளையும் கீழ் நோக்கி இருக்கும் படி அடித்துள்ளாய்! அப்படி இருந்தால் உன்னிடமுள்ள கொஞ்ச நஞ்ச அதிர்ஷ்டமும் ஓடிப் போய் விடும் என்பது நம்பிக்கை!
இப்போது பார், அதிர்ஷ்டத்தை உன்னிடமே நிறுத்தி வைக்கும்!
அற்புதம் சார்! ஒரு கை ரம்மி ஆடலாமா சார்?
ஹ்ம்ம்ம்... பலமான அதிர்ஷ்டம் உன் பக்கம் இருக்கிறது என்ற தைரியமா? சரி, வா!
சற்றைக்கெல்லாம் –
இந்தத் தடவையும் நான் தான் ஜெயிச்சேன் சார்.
டெஸ்மாண்ட்! அதிர்ஷ்ட தேவதையே உன் பாக்கெட்டில் இருக்கும் போலிருக்கே!
உப்! போகும் பாதையில் கருப்பு பூனை குறுக்கே போனால் என்னுடைய அதிர்ஷ்டம் பாழாகி விடும்! எனவே இந்தக் கட்டிடத்தை சுற்றிப் போகணும்!
அன்று பிற்பகலில்...
இதை பளபளப்பாக பாலீஷ் போடப் போகிறேன்...! சந்தோஷத்தில் இன்னும் விஷேச மாக ஏதாவது கொடுக்கும்!



இனி கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்! மிஸ்டர் கிர்பியுடன் சீட்டாட்டத்தில் ஜெயித்ததை கணக்கிடக் கூடாது - அவரைத்தான் எப்போவானுலும் என்னுல் ஜெயிக்க முடியுமே...!
ஒரேயடியாக இதையெல்லாம் நம்பிவிடாதே டெஸ்மாண்ட்! அதிர்ஷ்ட தேவதை பெரும் சாகஸக்காரி!
அதைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள் சார்! இந்த விஷயத்திலெல்லாம் நான் ரொம்ப நிதானமாக இருப்பேன்!
அப்போது..
உங்களுக்கொரு ரிஜிஸ்டர் தபால் சார்!
எங்கே கையெழுத்துப் போடுவது?
அடி சக்கை! இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறது! உள்ளே என்ன இருக்குமோ?
மழையாலும், புயலானுலும் தபால் பட்டுவாடா பண்ணுவதே அடியேனின் வேலை! அடுத்தவரின் கடிதத்தை படிப்பதல்ல!


ஹா, நான் நினைத்ததுதான்!
இங்கே பாருங்க சார்! என் பெரிய மாமா கிளாரன்ஸ் மண்டையைப் போட்டு விட்டா ராம்! தனது சொத் தில் பாதியை எனக்கு... உயிலில் எழுதி வைத்திருக் கிறாராம்!
பிரமாதம் டெஸ்மாண்ட்! சந்தேகமில்லை - அதிர்ஷ்டம் உன் பக்கம் அடிக்கிறது!
பெரிய மாமா கிளாரன்ஸ் பெரும் பணக்காரராக சாகவில்லை யாக்கும்?
ஆனால், ஒரேயொரு சின்ன சிக்கல் என்ன வென்றால், அந்த சொத்தின் பாதியை வைத்து இரண்டு வேளைக்கு பன்னும், டீயும் கூட வாங்க முடியாது!
இல்லைதான்! ஆனல் அதிர்ஷ்ட லாடம் கிடைத்த பிறகு சொத்தின் ஒரு பகுதி வந்து சேர்வது விசேஷம் தானே? இது பற்றி விக்கர்ஸிடம் சொல்ல வேண்டும்!


போகும் வழியில் -
ஏணியின் கீழ் குனிந்து போவது தப்பு! குதிரை லாடத் தின் அதிர்ஷ்டத் தைக் கெடுத்து விடும்..
மூட நம்பிக்கை டெஸ்மாண்டை இறுக்கிப் பிடித்தது.
என்ன தாத்தா ஏணிக்கடியில் போக பயமா?
உப்! ஏய் விலகிக் கொள்!
தட்! தட்!
கீழே வா! உன்னைக் கொல்கிறேன்!
குபுக்!
ஏணிக்கு கீழே நடந் தால் ஏதாவது ஏடா கூடமாய் ஆகும் என்பது எனக்குத் தெரியும்! இந்த விஷ யங்களையெல்லாம் விளையாட்டாக எடுத்துக் கொள்ளக் கூடாது!



ஹெரால்டு!வில் அம்புடன் விளையாடுகிறாய் - ஜாக்கிரதை!
ஹய்யா,குண்டூசி கீழே கிடக்கிறது. இன்று பூராவும் நமக்கு அதிர்ஷ்டம் தான்!
விஷ்
உதாசீனமாக கீழே போடப்பட்டுள்ள குண்டூசியை எடுப் பது கூட வெற்றிக்கு வழி வகுக்கும்!
அம்பு எய்ய ஒரு இலக்கு வேண்டும் பையா! மரத்தை பார்த்து விடக் கூடாது!
நீர் மட்டும் திடீ ரென்று குனியா திருந்தால் சூப்பராக இருந்திருக்கும்!
ஐயம் சாரி, ஹெரால்டுக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்!
பரவாயில்லை மேடம்.. இது என்னு டைய மரமல்ல...



பின்னர் பட்லர்கள் கிளப்பில்..
வரும் வழியில் ஒரு பையன் அம்பையும் வில்லையும் வைத்து இப்படிக் குறி பார்த் தான் விக்கர்ஸ்!
டெஸ்மாண்ட்! பின்னால் பார்!
அடக் கஷ்டகாலமே இந்தக் கண்ணா டியை குலுக்கல் முறையில் நமது கிளப் விற்க திட்ட மிட்டிருந்ததே!
கண்ணாடியை உடைத்தால் ஏழு வருஷத்திற்கு தரித் திரம் என்பார்கள்! இத்தோடு தொலைந்தேன்!
வ-வந்து ஏழு வருஷமா?
இந்தக் கண்ணாடி அப்படி ரொம்பப் பெரிசு இல்லை டெஸ்மாண்ட்! கண்ணாடியின் அளவுக்கும், அதை உடைத்தால் ஏற் படும் விளைவுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?
அப்படி நான் நினைக்கவில்லை விக்கர்ஸ்! பெரிசோ - சிறுசோ தரித்திரம் - தரித்திரம் தான்!



ஒன்று செய் டெஸ் மாண்ட்! சென்ட்ரல் பார்க்கிற்குப் போய் சுற்றிக் கொண்டிரு! மறுபடியும் உன்னை அதிர்ஷ்டக் குதிரை லாடம் தாக்கினால் போதும் - எல்லாம் சரியாகிவிடும்!
ஏழு வருஷமோ - எழுபது வருஷமோ..? இந்தக் கண்ணாடியை
குறைந்தது 95 டாலருக்கு விற்ப தாக இருந்தோம்!
அந்த 95 டாலர் களை நான் தண்டம் அழுது விடுகிறேன்!
பேசாமல் வீட்டுக்குப் போய் வரப்போகும் துர திர்ஷ்டங்களுக் காகக் காத்திருக்கப் போகிறேன்!
உன்னுடன் நானும் வருகிறேன் டெஸ்மாண்ட்! தேவைப்பட்டால் உதவுகிறேன்!
எதற்கும் கொஞ்சம் விலகியே நடந்து வா விக்கர்ஸ்? என் தலையில் விழப் போகும் இடி உன் னையும் தாக்கிவிடப் போகிறது!
இதற்கிடையில் நகரின் ஒரு பகுதியில் -
இதோ அவர் வந்து விட்டார்!
நம்முடைய பிரச் சனையை ரிப் கிர்பி யினால் தீர்க்க முடி யுமென்று நினைக் கிறாயா?
ADVENTURER'S CLUB EXHIBIT 2nd FL



ஆளைப் பார்த்தால் டாக்டர் டெட்லிக்கு சளைத்தவரில்லை என்று தான் படுகிறது!
ஆனல் அந்த அள விற்கு விவேகம் இருக்குமோ? டெட்லிக்கு மூளையுடன் முரட்டு உடம்பும் இருக்கிறது ஹாரிசன்!
கிர்பியோடு பேசிப் பார்ப்போம்!
ADVE
மிஸ்டர் கிர்பி, துப்பறியும் நிபுணர் தானே நீங்கள்? நான் ஹாரிசன்! சாகஸ வீரர்கள் சங்கத்தின் புதிய உறுப்பினர்.
உங்களைச் சந்தித்த தில் மிக்க மகிழ்ச்சி மிஸ்டர் ஹாரிசன்!
இது என்னுடைய பார்ட்னர், டாம்!
ஹலோ!
உங்களைச் சந்தித் ததில் மகிழ்ச்சி!
எங்களுடைய நிறுவ னத்திற்காக நீங்கள் ஒரு வேலையைச் செய்ய வேண்டும் என விரும்பு கிறோம், ரிப்...


"துருக்கியின் மலைப் பகுதிகளில் உள்ள அன்கார் ஓக்கில் எங் களுடைய பரம எதிரி செயல்பட்டு வருகிறான்!"
இதோ ஒரு துண்டு கிடைத்து விட்டது! பழங்காலத்து ரசவாதிகள் தங்கம் தயாரிப்பதற்கான பார்முலாவின் ஒரு பகுதிதான் இது!
உங்களை எதிர் பார்த்து ஆயிரக் கணக்கான வருடங் களாக இங்கேயே காத்திருக்கிறது டாக்டர் டெட்லி!
"டாக்டர் டெட்லி எங்கள் நிறுவனத்தி லிருந்து முக்கிய மான தஸ்தாவேஜு களைத் திருடிச் சென்று விட்டார் -"
இதில் நான் எங்கு வருகிறேன் ஹாரிசன்?
எங்கள் சார்பாக நீங்கள் அந்த தஸ்தா வேஜுகளை மீட்டு திரும்பக் கொண்டு வர வேண்டும் ரிப்!


டாக்டர் டெட்லி சட் டத்திற்கெல்லாம் அப்பாற்பட்டவன்! எங்களுக்கு உரி யதை நீங்கள் திரும் பப் பெற்றுத் தந்தால் கணிசமாகப் பணம் தருகிறோம்!
அதெல்லாம் சரி... மனிதனே தங்கம் தயாரிப்பதா? இதை எல்லா ரசவாதிகளும் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கைவிட்டு விட்டார்களே ஹாரிசன்?
அதே நேரம் தொலை தூரத்து அன்கார் ஒக்கில்...
சில நேரங்களில் உங்கள் செயல்கள் என்னை பயமுறுத்து கின்றன டாக்டர் டெட்லி..!
இது போன்ற துண்டு கள் இன்னும் கொஞ் சம் கிடைக்கட்டும் - அப்புறம் பார்! இந்த உலகத்தையே ஆட் டிப் படைக்கிறேன்!
தங்கம் இல்லாமல் உலகம் ஓடாது பிளவர்! தங்கம் தயாரிப்பதற்கான ரகசியம் இங்கு தான் எங்கோ இருக்கிறது என்று எனக்குத் தெரியும்...
ஒரு கனா தந்த உத்வேகத்தில் தேடும் படலம் தீவிரமடைகிறது!



தங்கம் தயாரிப்பதற் கான ரகசியத்தை டாக்டர் டெட்லிதான் திருடிச் சென்றான் என்பதற்கு உங் களிடம் ஆதாரம் இருக்கிறதா மிஸ்டர் ஹாரிசன்?
நிச்சயமாக மிஸ்டர் கிர்பி! அப்படி யாஞல் எங்களுக்கு உதவுவீர்கள் அல்லவா?
யெஸ். வரலாற்று சிறப்பு மிக்க அன் கார் ஒக்கைப் பார்க்க எனக்கு எப்போதும் ஆசைதான்!
நமக்கு கிர்பி தேவை தாஞ ஹாரிசன்?
கண்டிப்பாக! உன்னையோ என் னையோ பார்த்த மாத்திரத்தில் கொன்றுவிடுவான் டாம்! இந்த துப்பறிவாளர் நமக்குத் தேவையான ரகசியம் கிடைக்க வழி செய்வார்!
டெஸ்மாண்டையும் அழைத்துச் சென்றாலென்ன..?
அதைத் தொடர்ந்து...
ரசாயன முறையில் தங்கம் தயாரிப்பதற் கான பார்முலா பற்றிய ரகசியத்தை அவன் திருடிச் சென்று விட்டாஞம்!
டாக்டர் டெட்லி! பெயரைக் கேட் டாலே ஒரு தினுசாக இருக்கிறது சார்!


ரசவாதம் பற்றி நகரில் இருந்த எல்லா புத்தகத்தையும் கொண்டு வந்து விட்டேன் சார்!
தாங்க்ஸ் டெஸ்மாண்ட்! ஆனால் எந்தப் புத்தகத்திலும் மனிதனே தங்கம் தயாரித்தான் என்று ஒரு தகவல் கூட இல்லை...
தற்கால விஞ்ஞானிகள் அணு சிதறடிப்பின் மூலம் ஒரு சிறிய அளவு தங்கம் போன்றதொரு உதவாக்கரை கனிமத்தை உருவாக்கியிருக் கிறார்கள்!
''அன்கார் ஓக்கில் வேலை செய்யும் அந்த டாக்டர் முரடன் மட்டுமல்ல - மறை கழன்றவன் கூடத்தான்!''
''மிஸ்டர் ஹாரிசனிட மிருந்து டாக்டர் டெட்லி தகவல் களைத் திருடியிருந் தால் நாம் அதை மீட் டுத்தர வேண்டும்.''
யெஸ், இதோ மற் றொரு துண்டும் கிடைத்து விட்டது!
ஹாரிசன் காட்டிய ஆதாரம் சரியாகவே உள்ளது. எனவே, நாம் அந்த வேலையை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி விடுகிறேன்!



''நாம்'' என்று என் காதில் விழுந்தது சார்!
ஆமாம் டெஸ்மாண்ட்! தன்னந்தனியான காட்டுப் பகுதியில் நான் மட்டும் பணியில் ஈடுபடுவதை உன் மனசு ஏற்றுக் கொள்ளாது என்பது எனக்குத் தெரியும்!
நல்லது சார்! இப் போதே மூட்டை முடிச்சுகளைக் கட்ட ஆரம்பிக்கிறேன்!
சபாஷ் டெஸ்மாண்ட்!
அங்கே அன்கார் ஓக்கில் -
இந்த முட்டாள் தனம் எப்போது தான் முடியும் டாக்டர் டெட்லி?
ஹா! மிதாஸ் மன் னன் செய்தது போல நான் தொட்ட தெல் லாம் பொன்னாகும் போது பிளவர்...!



எனக்கு மிதாஸ் மன்னன் பற்றித் தெரியாது டாக்டர் டெட்லி!
அவனைப் பற்றிக் கவலைப் படாதே பிளவர். ஆனால், அந்த கதைக்குப் பின்னால் நிஜம் உள் ளது என்பதை நான் நிரூபிக்கத்தான் போகிறேன்!
அந்த முயற்சியில் யார் குறுக்கிட் டாலும் அவர்களை சுட்டுக் கொல்வதில் மகிழ்ச்சி அடைவேன்!
நியூயார்க்கில் -
எங்கள் கம்பெனியின் விமானம் உங்களையும் டெஸ்மாண்டையும் இந்த இடத்தில் இறக்கிவிடும் ரிப்.
இங்கு தான் எங்களுடைய பொய் சண்டையை துவக்கணுமாக்கும்?
சண்டை தத்ரூபமாக இருந்தால்தான் டாக்டர் டெட்லியை ஏமாற்ற முடியும்!
அதாவது, நாங்கள் உங்களின் எதிரிகள் என்று டெட்லியை நம்ப வைக்க வேண்டும்! அப்புறம் அவனிடமே வேலைக்கும் சேர வேண்டும்! அப்படித்தானே!
ஆமாம். டாக்டரின் தோண்டல் மையத்தை நீங்கள் அடைந்ததும் அவன் மீது ஒரு கண் இருக்கட்டும்...



விரைவில் ஒரு தனியார் ஜெட் விமானம் விண்ணில் சீறிக் கொண்டு கிளம்பியது...
பல மணி நேரம் பயணம் செய்த பின் அந்த விமானம் தரையிறங்கியது...!
இது தான் அன்கார் ஒக்கா? நாற்றமடிக்கும் இந்த இடத்திற்கு என்னை எந்த மடையன் வரவழைத்தான்?
இதோ பார் கிர்பி, எதற்கெடுத்தாலும் குறை சொல்லும் உன் போக்கு கொஞ்சமும் சரியில்லை. இந்த இடம் எப்படி இருக்கும் என்பதை ஏற்கனவே சொல்லித்தானே கூட்டி வந்தோம்...!
இவ்வளவு மோசமாக இருக்கும் என்று நீ சொல்லவே இல்லையப்பா!
உள்ளூர்க்காரர்கள் கூடத் துவங்கிவிட்டனர்! வெரிகுட்!
ஒரு "சண்டை" அரங்கேறியது!
அன்கார் ஓக் பற்றிய படத்தை நாங்கள் பார்த்திருந்தால் இங்கு வர மாட்டோம் என்பது உனக்குத் தெரியும்!
உள்ளூர்க்காரர்கள் நன்றாகவே கவனிக்கிறார்கள்!
தம்பி... கை நீட்டி பணம் வாங்கியதை மறந்து விடாதே!


இந்தா வட்டியுடன் திருப்பித் தருகிறேன்!
கும்ம்!
அதே போல கிர்பி போலிக்குத்து ஒன்றை வாங்கிக் கொண்டார்!
கும்!
நீங்கள் இருவரும் உதவாக்கரைகள் என்று ஹாரிசனிடம் படித்துப் படித்துச் சொன்னேன்! அவர் கேட்கவில்லை!
இதற்கெல்லாம் சேர்த்து நீ பதில் சொல்லியே ஆகணும்!
இதை உள்ளூர் ஆசாமிகள் டாக்டரிடம் சொல்வார்கள்.
அதற்கு அவசியமிராது. ஏனெனில் -
டாக்டர் டெட்லியே ''மோதலை'' உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்.


ஆக, ஹாரிசனும் அவனுடைய தடியர்களும் அன்கார் ஒக்கை நோட்ட மிட்டுக் கொண்டிருக் கிறார்களாக்கும்?
ஏய், கிழவா - நீயும் இங்கேயே கிட!
இங்கேயே கிடந்து நாசமாய்ப் போங்க!
பொத்!
ஹாரிசன் கேட்டால் நீங்கள் தொலைந்து போய் விட்டீர்கள் என்று சொல்லி விடுவேன்.
எப்படியாவது உன்னைப் பழி வாங்காமல் விடமாட்டோம்!
''நாடகம்'' டாக்டர் டெட்லியிடம் நமக்கு நல்ல உறவை ஏற்படுத்தும்.
சத்


தந்திரம் பலித்தது!
நான் வெறுப்பதைப் போலவே இவர் களும் ஹாரிசனை வெறுக்கிறார்கள். இவர்களை நான் பயன் படுத்திக் கொள்ளலாம்!
யெஸ், அவர்கள் நமக்குப் பயன் படுவார்கள்!
வெல்கம் டு அன்கார் ஓக்! உங்களுக்கு நான் உதவலாமா?
நிச்சயமாக!
ஓ.ஓ.. இந்த ஆள், படத்தில் பார்த்த டாக்டர் டெட்லி போலவே இருக்கிறானே!
இரு என்றாவது ஒரு நாள் உன்னைக் கவனிக்கிறேன்!
என்னையும், என் நண்பன் டெஸ்மாண்டையும் இந்த குப்பைக் கிடங்கிற்குக் கொண்டு வந்து தள்ளி விட்டான் ஹாரிசன்!
என்னை நானே அறி முகப் படுத்திக் கொள்கிறேன். நான் டாக்டர் டெட்லி...



நான் மருத்துவ டாக்டர் அல்ல... பல்வேறு விஞ்ஞான நுணுக்கங்களை ஆராய்பவன்!
நல்ல காலம் போங்கள்! 'டாக்டர் டெட்லி' என்ற பெயரை வைத்துக்கொண்டு வைத்தியம் பார்க்க போர்டு போட்டீர் களானால் ஒரு பயல் கூட உங்கள் திசையில் வர மாட் டான்! என் பெயர் ரிப்கிர்பி!
நீயும் உன் நண்பன் டெஸ்மாண்டும் பல சாலிகளாகவே இருக்கிறீர்கள். நீங்கள் கொஞ்ச நாள் இங்கு இருப் பதானல் எனக்காக வேலை செய்கிறீர் களா?
இதைப் போன்ற பொருளைத் தான் நகருக்கு வெளியே நான் தேடிக் கொண்டிருக்கிறேன். இதுபற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?
பழைய காலத்து எழுத்து! இல்லையா, டாக்டர்?
எதுவுமே தெரியாது என்று பொய் சொல்வதில் லாபமில்லை....
ஹாரிசனின் விமானிகள் உங்களை இங்கு 'அம்போ' என்று விட்டுச் சென்று விட்டதாகச் சொன்னீர்கள். இங்கு இருக்கும் வரை என்னிடம் வேலை செய்கிறீர்களா?
ஹ்ம்ம்ம்... வேறு வழி?
ஆல்ரைட், என் னோடு வாருங்கள்!


அதைத் தொடர்ந்து விசித்திரமான தொரு ''ஆராய்ச்சிக் குழு'' அங்கார் ஓக்கின் இடிபாடுகளை நோக்கிப் பயண மானது!
டாக்டர் டெட்லி யுடன் புதுசாய் யாரோ வருகிறார்களே? ஏதேனும் பிரச்சனையா?
இது தான் நமது முகாம்! எப்படி இருக்கிறது?
அங்கார் ஓக் பற்றி நான் என்ன நினைக் கிறேன் என்பதைத் தான் ஏர்போட்டி லேயே சொல்லி விட்டேனே டாக்டர்!
புராதன உலோகத் துண்டை காட்டினுனே... உங்களால் படிக்க முடிந்ததா சார்?
ஊஹூம்... நிதானமாக அதை ஆராய்ந்து பார்த்தால் தான் முடியும் டெஸ்மாண்ட்!



ஆனால் இது பைத் தியக் காரத்தனமான முயற்சி என்பதில் எனக்கு சந்தேக மில்லை!
ஜென்டில் மென், இவள் பெயர் பிளவர். இங்கே சமைக்க,முகாமை பராமரிக்க எனக்கு மிகவும் உதவியாக இருப்பவள்!
பெயரைப் போலவே அழகாய் இருக்கிறாய் பிளவர்!
சமையலில் நான் ஒத்தாசை பண்ணத் தயார் மேடம்!
சமையல் வேலையில் நான் நிபுணனுக்கும்! ஆனால்... என்ன செய்ய வேண்டும் என்பதை நீ தான் சொல்ல வேண்டும்!
முதலில் விறகு பொருக்கிக் கொண்டு வாருங்கள்!
அப்புறம் அடுத்த வேலை என்ன வென்று சொல் கிறேன்!
ரிப், இது போன்று சிறு சிறு உலோகத் துண்டுகளைத் தான் நான் இங்கு தேடு கிறேன்!
இதை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் டாக்டர் டெட்லி?
5000 ஆண்டு களுக்கு முந்தைய சுமேரியர்களின் எழுத்தாக இருக் கலாம்!



5000 ஆண்டு களுக்கு முன்பே பாபிலோனிய நாகரீகம் மிகவும் முன்னேறியிருந்தது. அவர்களது விஞ் ஞானிகள் நிஜமாகவே உருப்படியான ஆராய்ச்சிகள் செய்திருக்க வாய்ப்புண்டு!
ஓ, மியூசியத்தில் வைப்பதற்காக இதை சேகரிக் கிறேன்!
தங்கம் என்று சொன்னால் இவனே அமுக்கி விடுவான்!
ஹ்ம்ம்ம் - அப்படியா!
உள்ளூர் காரன் களுக்கு இந்த வேலையில் அவ்வளவாக இஷ்டமில்லை! எனவேதான் உன்னையும் டெஸ்மாண்டையும் எனக்கு உதவ அழைத்து வந்தேன்...!
பணம் கொடுக்கும் வரை என்னவேண்டு மானாலும் தேடத் தயார் நாங்கள்!
நான் அதை நன்றாகப் பார்க்கலாமா டாக்டர்?
ஓ.கே.! சீக்கிரமாக சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்குவோம்!
அதுவும் சரிதான்! அதிகாலையிலேயே வேலையை ஆரம்பிக்கணு மில்லையா?



ஏதாவது புரிகிறதா சார்?
ஹ்ம்ம்ம்... ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன் யூப்ரேட்ஸ் நதியில் மரங்களை ஏற்றிக் கொண்டு எவனோ கப்பல் பயணம் செய்தது பற்றிய குறிப்பு இது டெஸ்மாண்ட்!
நமக்கு பிர யோஜனப் படாது! தங்கம் பற்றியோ அதை எப்படித் தயாரிப்பது என்பது பற்றியோ எதுவுமே இல்லை!
கொஞ்ச நேரம் தூங்குவோம் டெஸ்மாண்ட்.
நாளை நம் இரண்டு பேருக்கும் அருமை யான எக்சர்சைஸ் காத்திருக்கிறது.
இப்போதே உடம் பெல்லாம் வலிக்குது சார்!
''டெஸ்மாண்ட் புதை பொருள் ஆராய்ச்சியைத் துவங்கினார்''
ஓ.கே. நாம் இப் போது வேலையைத் தொடங்குவோம்!
நிறுத்து! என்ன வேலை செய்கிறாய்?
உப்!


விலை மதிப்பற்ற பொருட்களை உடைத்து நொறுக்கப் பார்க்கிறாயா டெஸ்மாண்ட்? இது தான் உன் வேலைக் கான கருவிகள்!
இவைகளா? அவைகள் விளையாட்டுச் சாமான்கள் என்றல்லவா நினைத்தேன்...
ஹேய், என்னமோ இருக்கு என்று நினைக்கிறேன்!
இது தேறுமா டாக்டர்?
ஹூம்ம்ம் பார்க் கலாம்! பத்திரமாக எடுத்துவை ரிப்!
என்ன தேடுகிறோம் என்றே தெரியாமல் மடையன்கள் வேலை பார்க்கிறார் கள்! நல்லதாகப் போச்சு!
தங்கம் தயாரிக்கும் ரகசியம் கிடைத்த பிறகு பயல்களை விரட்டி விட வேண்டியதுதான்!


உங்கள் விளை யாட்டிற்கு இன்னொரு உலோகத் துண்டு கிடைத்துள்ளது போலிருக்கிறதே டாக்டர்?
இதில் என்ன இருக் கிறது என்று தெரியாமலேயே எனது புதிய உதவியாளர்கள் இதைக் கண்டு பிடித்துள்ளனர்!
டாக்டர் டெட்லியின் கணக்கு தப்பு!
சுமேரியர் காலத்தில் விலை மதிப்பற்ற உலோகங்களை இப்படித்தான் குறிப்பார்கள் என்று நினைக்கிறேன்!
கடுமையான வெயிலில் நம்மை வாட்டி வதைக்க வைத்த ஹாரிசனை நான் வெறுக்கிறேன் சார்!
வேலையை ஏற்றுக் கொண்டது நான் தானே டெஸ்மாண்ட்!
ஆனால் டாக்டர் டெட்லி ஹாரிசனிட மிருந்து என்ன திருடி யிருப்பார் என்று புரியவில்லை!
புதிய ஆசாமிகள் எங்கே வேலை செய் கிறார்கள் டாக்டர்?
அந்த கோவிலின் படிகட்டுப் பகுதியில் பிளவர். ஆனாலும் அவர்கள் மீது எனக்கு கொஞ்சம் சந்தேகம் ஏற்படு கிறது!


ஏன் டாக்டர்?
அந்தக் கிர்பி இதில் உள்ளவை ஒன்றுமே புரியவில்லை என நடிப்பதாக நான் நினைக்கிறேன்...
அவன் மீது ஒரு கண் வைத்திருப்பது நல்லது!
நாம் நினைத்தது போல அவன் ஹாரிசனின் எதிரியல்ல என்று தோன்றுகிறது!
விக்கர்ஸ் சொன்னது கரெக்ட் தான்- கோடீஸ்வர பங்கு பத்திர புரோக்கர் யாரிடமாவது நான்
வேலைக்குப் போயிருக்க வேண்டும்! இப்படி வெயிலில் அல்லாட அவசியமில்லாமல் போயிருக்கும்!
வேலையை முடித்து முகாமுக்குப் போகலாம் என நினைக்கிறேன் டெஸ்மாண்ட்!
அதுவும் சரிதான்! அங்கு எனக்கு ஒரு வேலை இருக்கு!
இது வரை அற்புத மான புதை பொருள் எதையும் நான் ஏன் தோண்டி எடுக்க வில்லை என்பது இப்போது தான் புரிகிறது!


உன்னுடைய அதிர்ஷ்டக் குதிரை லாடமா?
ஆமாம் சார், கையோடு அதையும் எடுத்து வந்தேன்...!
இது அதிர்ஷ்டமான லாடம் டாக்டர்! தோண்டும் வேலையை இது எளிதாக்கிவிடும் என நினைக்கிறேன்!
பிரமாதம் டெஸ்மாண்ட்!
ஒரு தலைமுறையில் மூட நம்பிக்கை என்று ஒதுக்கப் படுவது மற்றொரு தலைமுறையின் போது விஞ்ஞான உண்மையாகி விடுவதை மறந்து விடாதே!
அதே சமயம் கிராமத்தில்-
உள்ளூர்காரர்கள் யாரையாவது கூப் பிட்டு நம் சாமான் களை காபினுக்கு கொண்டு வரச் சொல் டாம்!
உடனே செய்கிறேன் ஹாரிசன்!
டாக்டர் டெட்வி, கிர்பி என்பவருடன் பேசினார். பிறகு அவர்கள் எல்லாரும் சேர்ந்தே போனார்கள்!
தேங்க் யூ. அவ்வப் போது தகவல் கொண்டு வா! உனக்கு நிறையப் பணம் தருகிறேன்!


இன்னும் ஒரு சில உலோகத் துண்டுகள் சிக்கினால் போதும்-பார்முலா கிடைத்த மாதிரி தான்!
இன்று இரவு நிலா வெளிச்சம் ஜோராக இருக்கிறது டெஸ்மாண்ட்! நான் கிராமத்தை ஒரு 'ரவுண்ட்' அடித்து விட்டு வருகிறேன்!
மகிழ்ச்சியாகப் போய் வாருங்கள் சார்! தப்பாக நினைக்காதீர்கள்-நான் தூங்கப் போகிறேன்!
கிராமத்தில் -
ஹலோ ரிப், வேலை எப்படி ஓடுகிறது?
ஓ:.. ஹாரிசன்.. நீங்கள் எப்போது வந்தீர்கள்?
இந்த கிர்பி நமது எதிரி ஹாரிசனுடன் பேசுகிறானே! டாக்டர் டெட்லி கில்லாடி தான்! இல்லா விட்டால் இவரைப் பின் தொடரச் சொல்லி யிருப்பாரா..?!
கிர்பியும் ஹாரிசனும் எதிரிகள் இல்லை! எல்லாம் நாடகம்!
பிளவர் டாக்டர் டெட்லிக்காக வேவு பார்த்தாள்.


உங்களுடைய தஸ்தாவேஜுகள் திருடப்பட்டதற்கான சான்று எதையும் காணோம் ஹாரிசன்..
எனவே இந்த கேஸில் இருந்து கழன்று கொள்ளலாம் என நினைக்கிறேன்!
ஹ்ம்ம்ம்.... அப்படியா?
அவ்வளவு லேசாக இதிலிருந்து விடுபட முடியாது துரை!
பிளவரால் அவர் களைப் பார்க்க முடிந்தது. பேசுவதைக் கேட்க முடியவில்லை.
டாக்டர் டெட்லி ஒரு புதை பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஹாரிசன். அவர் ஏன் இன்னொருவருடைய தஸ்தா வேஜுகளைத் திருட வேண்டும்?
எப்படித் தோண்டு வது என்று அவனுக்குத் தெரிகிறது ரிப்! ஆனல் எங்கே தோண்டுவது என்று அவனுக்கு எப்படித் தெரிய வந்ததாம்?
இவ்வளவு போதும்.. உடனடியாக விஷயத்தை டாக்டர் டெட்லியிடம் சொல்ல வேண்டும்!
அதைத் தொடர்ந்து-
இந்த ஹாரிசனும் மிஸ்டர் கிர்பியும் நண்பர்கள் போலத் தெரிகிறது. நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர்...


நான் சந்தேகப் பட்டது சரிதான்! அவர்களிடமிருந்து கடைசியாக வேலை வாங்கப் போகிறேன்.. அதன் பிறகு பசங் களுக்கு உயிரோடு சமாதி!
கொடூரமானதொரு சதி வலை விரிக்கப் பட்டது!
இந்த ''டைனமைட்'' அந்தப் புளுகர் களின் கணக்கை முடிக்கும்!
என்னிடம் பொய் சொன்னதற்கு அவர் களுக்குப் பாடம் கற்பிக்கிறேன்!
எல்லா வகையான புராதன பொக்கிஷங் களைக் கண்டு பிடிக்க ஐயா தயார் சார்! என் அதிர்ஷ்ட குதிரை லாடம் மின்னுவதைப் பாருங்கள்!
இன்று கடைசி முயற்சி டெஸ்மாண்ட்! நாளையிலிருந்து வேலைக்கு முழுக்குப் போடப் போகிறோம்!
அதிர்ஷ்டம் நெருங்கி வரும் போது இப்படியா சே..!


ஆனால் டாக்டர் டெட்லி வேறுவித மாக நினைத்தார் -
உளவாளிகளையா அனுப்பி வைக் கிறாய் ஹாரிசன்? இனி வேடிக்கையைப் பார்!
உங்களுக்குத் தேவையான தகவல் களைக் கொடுத்து விட்டேன் டாக்டர்! இந்த ஆசாமிகளை கொல்லப் போகிறீர்களா?
ஹெ! ஹெ! ஹெ... அதைப் பற்றி கவலைப் படாதே பிளவர்!
அவர்களுக்கே என்ன நடந்தது என்று தெரியாது!
வேலையை ஏன் விடுகிறோம் சார்? தங்கம் தயாரிக்கும் பார்முலா வெறும் டுபாக்கூர் என நீங்கள் உறுதி செய்து விட்டீர்களா? ....
அது அல்ல டெஸ்மாண்ட். ஆனால் ஒன்று மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது! ஹாரிசனிடமிருந்து டெட்லி எதையும் திருட வில்லை!



நல்லது சார். இதை மட்டும் தோண்டிப் பார்த்து விட்டு நான் சமையலறைக்குத் திரும்பப் போகிறேன்!
இந்த தடியன்களை நான் என்ன செய்யப் போகிறேன் என்பது பிளவருக்குத் தெரியாமல் இருப்பது தான் நல்லது...
அடி சக்கை! இன்னைக்கு ஏதாவது அகப்படும் என்று அப்போதே எனக்குத் தெரியும்!
அதிர்ஷ்ட லாடம் வேலை செய்கிறது!
பிளிங் பிளிங்
பார்த்தால் உருப்படியாகத் தெரிகிறதே சார்?
இருக்கலாம் டெஸ்மாண்ட்! படித்துப் பார்க்கிறேன்...
சுமேரியர் காலத்தின் ரசாயனக் குறிப்பு தான் இவை!
அட.. அட.. சுறுசுறுப்பாக வேலைகள் நடக்கிறதாக்கும்? ஏதாவது கிடைத்ததா?


இது பிரயோஜனப் படுமா இல்லையா என்பது தெரிய வில்லை டாக்டர்!
உண்மையில் இது யாருக்கு உரியது என்பதும் தெரிய வில்லை! கொஞ்ச நேரம் பேச்சுக் கொடுப்போம்...!
அதை இப்படிக் கொடு பார்க்கலாம்!
ஹ்ம்ம்ம்... யெஸ்!
இதுதான் இறுதியாக கிடைக்க வேண்டிய பகுதி!
துப்பாக்கி தான் பயங் காட்டுகிறது!
வெற்றிக் களிப்பில் மிதந்தார் டாக்டர் டெட்லி!
தங்கம் தயாரிக்கும் பார்முலாவின் இறுதிப் பகுதி இதுதான்! வெற்றி பெற்று விட்டேன்!
நாங்கள் மேலே வரலாமா டாக்டர்?
அவசியமில்லை! இன்னொரு இடத் திலும் தேட வேண்டியுள்ளது!


அது தான் உங்கள் சமாதியாகப் போகிறது?
கமான்!
கொஞ்ச நேரம் டெண்டிற்குப் போய் வரலாம் என்று நினைக்கிறேன் டாக்டர்...!
அதற்கு நேரமில்லை!
கையைத் தூக்கிக் கொண்டு நேராக நடங்கள்!
இப்படி நடக்கும் என்று தான் பயந்தேன்!
உங்கள் நடவடிக்கைகள் விசித்திரமாக உள்ளன டாக்டர்!
ஏனிந்த திடீர் பகை?
நானும் அதே கேள்வியை எழுப்பலாமா?
வாயை மூடுங்கள்.


உள்ளே போங்கள்!
என்ன தான் நடக்குது சார்?
நாம் இப்போது கைதிகள் டெஸ்மாண்ட்!
டாக்டர், நீங்கள் தப்பு செய்கிறீர்கள், எங்களுக்கும் ஹாரி சனுக்கும் எந்தவித ஸ்நேகமும் இல்லை!
உள்ளே போ ரிப்! நான் வேறு விதமாக கேள்விப்பட்டேன்...
நீ எங்களைக் கொல்லலாம். ஆனால் உனது தங்கம் தயாரிக்கும் பார்முலா செல்லு படியாகாது! ஒரு போதும் செயல் படாது!
ஓஹோ! நான் என்ன தேடுகிறேன் என்பதும் உனக்குத் தெரியுமா? கதவுக்குப் பின்னால் போ - அல்லது இந்தத் தோட்டா இங்கேயே உன் உயிரைக் குடித்து விடும்!


நாம் இப்ப என்ன செய்வது சார்?
இங்கேயே இரு டெஸ்மாண்ட். நான் அவனை மடக்கப் பார்க்கிறேன்.
ஆண்டவனே... வெடி குண்டு வைத் திருக்கிரு ன்!
பூம்ம்ம்
டாக்டர் டெட்லி யோடு நாடகமாட வரும் உளவாளி களுக் கெல்லாம் இதுதான் கதி!
டாக்டர் ஏதோ ஒரு பயங்கர சப்தம் கேட்டதே! என்ன நடந்தது?
ரிப்பும் டெஸ்மாண்டு ம் செத்து விட்டனர் பிளவர்!
ஆனால் -



.. என்ன ஆச்சு சார்?
வாசல் பகுதியை டாக்டர் டெட்லி வெடி வைத்து தகர்த்து அடைத்து விட்டான்! நமக்கு இதுவே சமாதி!
உயிருடன் சமாதியா? சே... என் அதிர்ஷ்ட லாடம் இப்படிக் காலை வாரி விட்டதே!
கடைசித் தடயங் களும் சிக்கி விட்டன பிளவர்! சீக்கிரத்தில் உலகப் பெரிய கோடீஸ்வரனுகி விடுவேன்!
ஆனால் அதிக அளவில் தங்கம் தயாரிக்கும் போது தங்கத்தின் விலை வீழ்ச்சி அடையாதா டாக்டர்?
அட.. அட.. என் க்ண்ணம்மாவுக்கு இந்தக் கணக்கெல் லாம் தெரிந்திருக்கே! அதைப் பற்றி கவலைப் படாதே!
அங்கார் ஒக்கில் ஒரு நெடுநாளையக் கனவு நனவாகும் கணம் நெருங்கிக் கொண்டிருந்தது...
...மற்றொரு இடத்திலோ
டெஸ்மாண்ட்! உள்ளே இருக்கும் பிராண வாயுவை மிச்சம் பண்ண இந்த லைட்டை அணைக்கப் போகிறேன்...



அதே சமயம் வெளியே -
அது தான் டெட்லி யின் முகாம். தள்ளி யிருந்தே நோட்டம் பார்ப்போம் டாம்!
ஆமாம்... பக்கத்தில் போனால் ஆபத்து!
எதுவும் தெரிகிறதா ஹாரிசன்?
அங்கு யாரும் தோண்டுவது மாதிரி தெரியலை டாம்! அவர்கள் தேடியது கிடைத்து விட்டது என்று படுகிறது எனக்கு!
இதில் உள்ள வற்றைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவது போல் தெரிகிறதே டாக்டர் டெட்லி!
யெஸ், பிளவர்... சுமேரியர்கள் தங்கம் தயாரிக்க அதீத அளவில் மின் சாரத்தைப் பயன் படுத்தியுள்ளனர்!
சுமேரியர்கள் காலத் தில் ஏது மின்சாரம் டாக்டர்?
இயற்கை உருவாக் கும் மின்சாரத்தை மறந்து விட்டாயா பிளவர்?
மின்னலிலிருந்து வெளிப்படும் மின் சாரம்! அதுதான் புதிருக்கு விடை!



டெட்லி சொர்க் கத்தை நோக்கிக் கையைக் காட்டு கிறான்!
நீ அமர்த்திய ரிப்பும், டெஸ்மாண்டும் எங்கே போனார்கள்?
அவர்கள் ஆளைக் காணோம்! எங்கே போய்த் தொலைந் தார்களோ?
தொலைந்து போன வர்கள் சும்மா இருக்கவில்லை...
உன்னிடமிருந்த மண்வெட்டி எங்கே டெஸ்மாண்ட்?
அபாரமான ஐடியா சார்!
வெளியே -
இது ஒன்றே நன்றாக செயல்படும்!
என்ன செய்கிறீர்கள் டாக்டர் டெட்லி? டெண்ட் போட உதவும் அலுமினியக் கம்பிகளைக் கொண்டு தூண்டில் கம்பி செய்கிறீர் களா?
கரெக்ட் பிளவர்! பல லட்சக் கணக்கான வோல்ட்ஸ் மின் சாரத்திற்கு இதன் மூலம் தூண்டில் போடப் போகிறேன்!


நான் கீழே விழுந்து விட்டால் சிதறிக் கிடக்கும் என் உடலின் பகுதிகளை அள்ளிப் போடக் கூடத் தேவை யிராது!
டெட்லி ஒரு உயர மான தூணில் ஏறிக் கொண்டிருக்கிறான்! பயலுக்கு மறை கழன்று விட்டதா?
டெட்லி தூணில் ஏறு கிறானு? எதற்காக?
நீயே பார்த்துக்கோ!
கொடிக் கம்பத்தை நாட்டி வைப்பது போலத் தெரிகிறது!
பல லட்ச வோல்ட்ஸ் மின்சாரத்தைப் பிடிக்கப் போகிறாரா? டாக்டர் என்ன சொல்கிறார்?


மின்னலே வா! மரணத்தைக் கொடு அல்லது மாபெரும் பணக்காரனுக்கு... ஐ டோண்ட் கேர்!
இயற்கைக்கு சவால் விட்டான் டெட்லி!
நம்மிடம் தாதுக் களும், ரசாயனக் கலவைகளும் உள்ளன பிளவர்! இந்த வயர் தங்கம் தயாரிக்க மின்சாரத்தைக் கொண்டு வரும்!
மரணத்தையும் கொண்டு வர வாய்ப் புள்ளது டாக்டர் டெட்லி! ஜாக்கிரதை!
இது மின்னலை கவர்ந்திழுக்கும் கம்பி! ஒன்று டெட்லி ஏதோ அபாரமான திட்டம் தீட்டியிருக்க வேண்டும்! அல்லது - சுத்தமாக மறை கழன்றிருக்க வேண்டும்!
மின்னல் தோன்றா விட்டால் என்ன செய்வது டாக்டர்?
மின்னல் வரும் வரை சுமேரியர்களின் குறிப்பின் படி எல்லாவற்றுடனும் தயாராக இருக்க வேண்டியது தான்!


க்ளிங்! க்ளிங்! க்ளிங்! க்ளிங்!
பிளவர், நான் செய்து காட்டியது போல அந்த உலோக கட்டிகளை அடுக்கி வை!
டாக்டர் டெட்லி... எனக்கென்னவோ பயமாக இருக்கிறது!
அதே சமயம் -
லைட்டரை ஒரு நிமிஷம் பொருத்து கிறேன்!
வெளியே கேட்கும் சப்தத்திலிருந்து நாம் சரியான வழியில் தான் செல்கிறோம் என்பது உறுதி டெஸ்மாண்ட்!
வெளிச்சம் லேசாகத் தெரிந்தால் இன்னும் உற்சாகமாக இருக்கும், சார்!
''புதையுண்ட'' புதை பொருள் ஆராய்ச்சி யாளர்கள் வெளி யேற வழி தேடினர்...



பிளவர்... க்ளை மாக்ஸ் நெருங்கி விட்டது...!
கமான் டாம், நாம் இன்னும் நெருங்கிச் செல்வோம்!
ஜாக்கிரதை ஹாரிசன்!
இப்போது இதைத் தவிர வேறு வழி இல்லை டாம்!
தங்க வெறியர்களை தடுத்து நிறுத்த முடியாது -
அபாரம் பிளவர். விரைவில் இந்தக் கட்டிகளில் ஒரு வியத்தகு மாற றத்தை நீ காண்பாய்!
ஆஹா!


நாம் தப்பி விட்டோம் டெஸ்மாண்ட்! டாக்டர் டெட்லியால் நம்மை பார்க்க முடியாது!
நானும் வெளியே வருகிறேன் சார்! யார் பார்த்தாலும் கவலை இல்லை!
பைத்தியக் காரத்தன மான இந்தத் தங்கம் தயாரிக்கும் திட்டம் ஒரு போதும் நிறை வேறாது. சப்தமின்றி கம்பி நீட்டி விடுவோம்!
இங்கிருந்து டாக்டர் டெட்லியை குருவி மாதிரி சுட்டு விடுவோம் டாம்!
ஆல்ரைட் டாக்டர், அடுத்து என்ன செய்ய வேண்டும்?
அந்த ஒயரை குவியல் மீது போடு பிளவர்! நான் ரசாயனக் கலவையை அதன் மீது ஊற்றுகிறேன்!
க்ராக்!
இப்போது... அவன் தொலைந்தான்!
ஓ!
க்ராக்!


டாக்டர் டெட்லி! என்ன ஆச்சு?
ஒரு தோட்டா கண்ணாடிக் குடுவையை உடைத்து விட்டது! கவனமாகக் கலந்த ரசாயன க் கலவை எல்லாம் போச்சே..!
அவன் ஹாரிசன் தான்!
டுமீல்!
அவர்களில் ஒருவன் குளோஸ் பிளவர்!
நோ, நோ டாக்டர் டெட்லி... நீங்கள் கொலை செய்யக் கூடாது...
ஹாரிசன்! ஹாரிசன்..!
கிராக்!


டாக்டர் டெட்லியின் குறி தப்பிவில்லை…
இரண்டாமவனும் காலி..
தங்கம் முழுசும் நமக்கே பிளவர்!
நோ, நோ, நீங்கள் செய்வது தப்பு டாக்டர்!
டெஸ்மாண்ட் - டாக்டர் டெட்லி அவன் வழியில் குறுக்கிட்ட ஹாரிசனையும் டாமையும் காலி செய்து விட்டான்!
அவன் லேசுப்பட்ட ஆள் இல்லை சார்!
… பூமியில் ரத்தம் சிந்திவிட்டது! இதற்கு நாம் பதில் சொல்லித்தான் தீர வேண்டும் டாக்டர்!
மின்னலே வா! செல் வத்தை அள்ளித் தா!
பளிச்!



சொல்லி வைத்தாற் போல ஒரு ராட்சஸ மின்னல் கீற்று சீறி வந்தது!
மை - காட்! அங்கே பார் டெஸ்மாண்ட்! பிளவரைப் பார்!
யெ.. யெஸ், சார். இது நிஜம் தானு சார்?
தங்கம்! மின்னலும் ரசாயனக் கலவையும் சேர்ந்து அவளைத் தங்கமாக மாற்றிவிட்டதே!
டாக்டர் டெட்லியின் ஆராய்ச்சிக்கு வெற்றி! ஆனுல் -
பிளவர்! நான் நேசித்த ஒரே பெண்ணான உன்னையும் தங்க வெறிக்குப் பலி கொடுத்து விட்டேனே...!
..இதை அவள் கையில் கொடுத்தது நான்தான்!


க்ராஷ்! க்ராஷ்!
மின்னல் இன்னொரு பலி வாங்கியது!
இங்கே பாருங்க சார்! மழையில் எ-என்ன ஆகுதுன்னு...!
யெஸ், டெஸ்மாண்ட். பார்க்க சகிக்கவில்லை... அவள்... அவள் உருகிக் கொண்டிருப்பது போல் தெரிகிறது!
பிளவரின் உருவம் சிறிதாகி விட்டது சார்! இப்படியும் ஆகுமா?
அங்கார் ஓக்கில் எதுவும் நடக்கும் டெஸ்மாண்ட்!



பயங்கர மழையால் தண்ணீர் பெருக்கெடுத்தது...!
திடீர் வெள்ளம்! மேட்டுப் பகுதியை நோக்கு ஓடு டெஸ்மாண்ட்!
வெள்ளம் எல்லாவற்றையும் அடித்துச் சென்று விடும் சார்!
யெஸ் டெஸ்மாண்ட்! குறிப்பாக டாக்டர் டெட்லிக்கு விபரீத ஆசைகளை ஏற்படுத்திய சுமேரியர் காலத்து உலோகத் துண்டுகளையும்தான்!
அப்புறம் இன்னொரு விஷயம்... இப்படி மின்னலடிக்கும் போது இரும்புக் குதிரை லாடத்திற்கு பக்கத்தில் நிற்பது அவ்வளவு விவேகமல்ல...
இறைவா... இந்தக் காலத்தில் எதையும் நம்ப முடியாது போலிருக்கிறதே!


சற்றைக் கெல்லாம் -
புயல் கடந்திருச் சுன்னு நம்புறேன் சார்!
உயிர் இருக்கா சார்?
இல்லை டெஸ்மாண்ட்! மின்னல் டாக்டர் டெட்லியின் கணக்கை முடித்து விட்டது!
உள்ளூர்காரர்களைக் கொண்டு சவக் குழி தோண்டச் செய்ய லாம்! ஆனால் கரைந்து விட்ட பிளவரை என்ன செய்வது?
வேறு யாருக்கும் சாவைக் கொண்டு வரும் முன் இந்தக் கம்பியை இழுத்து எறிவது தான் நல்லது!
பாவம் பிளவர்
பிளவர் நின்று கொண்டிருந்த இடம் இதுதான்! மஞ்சள் நிறத்தில் சில துகள்கள் உள்ளன!


இது என்னவென்று அறிய எனக்கு விருப்பமில்லை! நடந்த தெல்லாம் கெட்ட கனவாகக் கூட இருக்கலாம்! புயலடித்த போது பிளவர் தப்பி ஓடி யிருக்கலாம்!
யெஸ்... இருக் கலாம் சார்!
மழையின் சீற்றத்தில் நாம் கவனிக்காத போது பிளவர் ஓடிப் போயிருப்பாள்!
அப்படியே நம்ப வேண்டியது தான் டெஸ்மாண்ட்!
டாக்டர் டெட்லியின் ஆய்வுக் கூடம் வெள்ளத்தில் நாச மாகி விட்டது! உலோகத் துண்டு களும் அழிந்து விட்டன!
ஐயோ! காப்பாற்றுங்கள்!
தயவு செய்து என்னைக் காப்பாற்று ரிப்!
உங்களின் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறேன் ஹாரிசன்! பதிலாக உங்களுடைய விமானத்தில் என்னையும் டெஸ்மாண்டையும் ஊருக்கு அழைத்துச் செல்ல வேண்டும்!
நான் குதிரைகளைக் கொண்டு வருகிறேன் சார்!


மீண்டும் ஒரு விசித்திர ஊர்வலம் அங்கார் ஓக்கில்! இம்முறையோ சாவின் நெடி அங்கே தூக்கலாகயிருந்தது!
அங்கார் ஓக்கின் சிறிய ஆஸ்பத்திரி சிகிச்சை தர முன் வந்தது.
பலத்த காயமடைந் துள்ளனர் டெஸ்மாண்ட்! கொஞ்ச நாட்களில் குணமடைந்து விடுவார்கள் ...
ஹ்ம்ம்.. டாக்டர் டெட்லிக்கும் பிளவருக்கும் அதிர்ஷ்டமில்லை!
ரைட்! இனி நமது அடுத்த வீரச் செயலே வீடு திரும்புவது தான்...


பைலட், எங்களை ஊருக்கு அழைத்துச் செல்!
உன் முதலாளி குணமடைந்ததும் நீ மீண்டும் இங்கே வா!
ஓ. கே.!
சார்.. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஒரு குட்டித் தூக்கம் போட்டு விடுகிறேன்..
அதைச் செய் டெஸ்மாண்ட். நான் கொஞ்சம் படிக்க வேண்டும்!
இந்த உலோகத் துண்டுகளை நகல் எடுத்த போது இப்படி நடக்கும் என்று ஒரு போதும் நினைக்கவில்லை...!
எதை நம்புவது... எதை நம்பாமல் இருப்பது என்றே புரியவில்லை!
கிர்பி புதிரான பல தகவல்களுடன் வீடு நோக்கிப் பறந்து வந்தார்!
பல மணி நேரப் பயணத்திற்குப் பின்னர்...



இந்தப் பயணத்திலிருந்து இது ஒன்றைத் தவிர வேறு எதுவும் மிஞ்சவில்லை... ஆனால் இதைக் கொண்டு என்ன செய்வதாம்?
இந்த 'அதிர்ஷ்ட' லாடத்தை என்ன செய்வது சார்?
நாம் பத்திரமாக வீடு திரும்பி விட்டோம் டெஸ்மாண்ட்! இதுவே நமக்கு அதிர்ஷ்டம் தான்! இனி இதை, பட்லர் கிளப்பில் யாருக்காவது கொடுத்து விடலாமே?
அதைத் தொடர்ந்து -
இதை யாராவது கண்டு பிடித்து எடுத்துக் கொள்ளட்டும்!
நல்ல ஐடியா, கண்ணா!
இதை என் மேல் தூக்கி எறிந்தது யார்?
மட்!
இது பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா குள்ளா?
அட - குதிரை லாடம்! எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லையேப்பா!
டெஸ்மாண்ட் மூட நம்பிக்கைகளுக்கு முழுக்குப் போட்டான் -


தங்கம் தயாரிக்கும் முயற்சி இரு உயிர் களைப் பலி வாங்கி விட்டது! இதை என்ன செய்யலாம்?
பிளவர் எங்கிருந் தாலும் மகிழ்ச்சி யுடன் இருக்க ஆண்டவனை வேண்டுகிறேன்! பூமியில் ஆண்டவன் படைத்த தங்கமே போதும்... செயற்கைத் தங்கம் வந்தால் பூமி தாங்காது!
கிளப்பின் குத்துச் சண்டை சாம்பியனிடமிருந்து உன்னுடைய அதிர்ஷ்ட குதிரை லாடத்தைக் கேட்டுப் பெற வில்லையே டெஸ்மாண்ட்?
இதிலெல்லாம் சுயநலம் கூடாது யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்!
BUTLERS CLUB

# புக் - மார்கெட்

## தேவை!

லயன்

1. டிராகன் நகரம்
2. மனித எரிமலை
3. யார் அந்த மினி - ஸ்பைடர்?
4. ஆப்பிரிக்க சதி
5. மீண்டும் ஸ்பைடர்
6. கொலைப் படை
7. சாகஸத் தலைவி

இந்த புக்குகளை வாங்கத்
தயாராக இருக்கும் வாசகர் :

**S. நரேஷ் குமார்,**
95, சாலிட் தெரு, பல்லாவரம் - 43.

## தேவை!

லயன்

1. சதுரங்க வெறியன்
2. டாக்டர் டக்கர்
3. எத்தனுக்கு எத்தன்
4. மீண்டும் ஸ்பைடர்
5. யார் அந்த மினி ஸ்பைடர்?

புக்குகளை வாங்கத்
தயாராக இருக்கும் வாசகர் :

**G. ஆனந்த்,**
S/o. K. கோவிந்தன்,
ஸ்ரீ ராமுலு டெய்லர்,
மாரியம்மன் தெரு,
தாஸ்நாயக்கன்பட்டி - 636 201.

## தேவை!

1. கத்தி முனையில் மாடஸ்டி
2. உலகப் போரில் ஆர்ச்சி
3. இரத்தப் படலம் - I

தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி :

**நெல்லி இதயவேந்தன்**
அ. கட்டுபடி & Post
Via T. B. சானடோரியம்
வேலூர் - 632 011.

## தேவை!

லயன்

1. எத்தனுக்கு எத்தன்
2. டாக்டர் டக்கர்
3. இரும்பு மனிதன்
4. மரணக் கோட்டை

திகில்

5. கறுப்புக் கிழவி ஸ்பெஷல்
6. விண்வெளிப் படையெடுப்பு

புக்குகளை வாங்கத்
தயாராக இருக்கும் வாசகர் :

**E. R. B. சற்குணர்,**
4, 3வது குறுக்குத் தெரு,
கிருஷ்ணா நகர், பம்மல், சென்னை - 75.

---

லயன் காமிக்ஸ்

ஜனவரி '94 முதல்
சந்தா ஆரம்பமாகிறது!

# ஓவியப் போட்டி!

வாசக ஓவியர்களே,

போட்டிக்கு அனுப்பும் சித்திரங்கள் இண்டியன் - இங்க் அல்லது கறுப்பு போஸ்டர் கலரில் தான் இருக்க வேண்டும். பென்சில், ப்ளூ-இங்க் பேனு முதலியவற்றைப் பயன்படுத்த வேண்டாம். உங்கள் சித்திரங்களை அனுப்பும் போது கவரில் தெளிவாக "ஓவியப் போட்டி" என்று குறிப்பிட மறந்து விடாதீர்கள்! All the best!

- ஆசிரியர் -




ARCHIE
ஜெ.நிமல்ராஜ
127.பாபரி வீதி
கொழும்பு-13

For quality printing

of

Books, Magazines, Calendars, Posters,

Stationeries, Diaries, Cartons etc.

Please contact:

**THE VIJAY BOOKS**

Quality Offset Printers,

8/D-5, Chairman P.K. S. A. A. Road,

Muthu Comics Compound,

Ammankovilpatti,

**SIVAKASI - 626 189.**

☎ (04560) 21159 & 20649

அடுத்த வெளியீடு!





இன்ஸ்பெக்டர் டேஞ்சர் துப்பறியும் க்ரைம் க்விஸ்!
கம்பெனிகளிலிருந்து ரகசியங்களைத் திருடி போட்டிக் கம்பெனிகளிடம் விற்கும் கும்பல்கள் பயங்கரமாய் பெருகி விட்டன!
புது மாடல் கார் செய்து வரும் இந்தக் கம்பெனியில் ஒரு ஊழியரை கைது செய்திருக்கிறார்களாம்!
எங்களது லேட்டஸ்ட் மாடல் கார் பற்றிய வீடியோ டேப்புடன் கையும் களவுமாக மிஸ்டர் வில்சன் பிடிபட்டுள்ளார்!
நான் நிரபராதி! என்னை நம்புங்கள்!
எங்கள் மேனேஜர் மிஸ்டர் மர்பி மட்டும் இல்லையென்றால் வீடியோ டேப்புடன் இவர் தப்பியிருப்பார்! என்ன நடந்தது என்பதை விளக்கமாகச் சொல்லுங்கள் மிஸ்டர் மர்பி!
இவர்கள் சொல்வது அத்தனையும் பொய்!
'வில்சனும், நானும் எங்களது புது மாடல் காரின் விசேஷ அம்சங்கள் பற்றிய வீடியோ கேசட்டை அப்போதுதான் பார்த்து முடித்துக் கொண்டிருந்தோம்..
THE END
VIDEO
...அப்போது போன் மணி அடித்ததால் நான் எழுந்து போனேன்! 'ராங் - நம்பராக' இருந்ததால் ஒரு சில நொடிகளிலேயே வீடியோ ரூமுக்குத் திரும்பி விட்டேன்!
பேத்துகிறான்!
"வில்சன் வீடியோ கேசட்டை எடுத்துக் கொண்டு நழுவிக் கொண்டிருந்தார்"
VIDEO
எங்கே டேப்பை ஓட விடுங்கள்! வில்சனிடம் பிடிபட்டது அதே டேப் தானா என்று பார்த்து விடுவோம்!
சந்தேகமே இல்லை... அதே டேப் தான்!
ஹ்ம்ம்ம்... புது மாடல் காரின் ரகசியங்கள் பற்றி கிட்டத்தட்ட 1 1/2 மணி நேரம் எங்கள் விஞ்ஞானிகள் விளக்குவார்கள்!
START 1. TEST
இது மட்டும் எங்கள் போட்டியாளர்களிடம் கிடைத்தால் -
மர்பி... ஒரு அப்பாவி ஊழியரை மாட்டி விட முயற்சித்த
குற்றத்திற்காக உன்னைக் கைது செய்கிறேன்!
இன்ஸ்பெக்டர் டேஞ்சருக்கு